பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

22 04 2025 6 45
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா – அமெரிக்கா இடையே பல்வேறு துறைகளில் நீடித்து வரும் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடியும், அமெரிக்க துணை அதிபர் திரு. **J.D. Vance**-ம் ஆய்வு செய்தனர்.

- அமெரிக்க அரசுடன் இருதரப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்வது குறித்து மத்திய அரசு தீவிரமாக செயல்பட்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

- தேசிய கல்விக் கொள்கையின்படி, மூன்றாவது மொழியைப் பயிற்றுவிப்பது கட்டாயமல்ல என்பது குறித்து, மத்திய அரசு தெளிவான வழிகாட்டுதலை வழங்குமா என முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

- கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் பிரான்சிஸ் மறைவுக்கு இந்தியாவில் 3 நாள் அரசுமுறை துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

- ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 39 ரன் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

இந்தியா – அமெரிக்கா இடையே பல்வேறு துறைகளில் நீடித்து வரும் ஒத்துழைப்பு குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடியும், அமெரிக்க துணை அதிபர் திரு. **J.D. Vance**-ம் ஆய்வு செய்தனர்.

இந்தியா வந்துள்ள அமெரிக்க துணை அதிபர் புதுதில்லியில் நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து பேச்சு நடத்தினார்.

அமெரிக்க துணை அதிபருடன் அவருடைய மனைவி மற்றும் குழந்தைகளும் வந்துள்ளனர்.

அவர்களுக்கு பிரதமர் நேற்று இரவு விருந்தளித்து கௌரவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் தாம் மேற்கொண்ட வாஷிங்டன் பயணத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி அமெரிக்க துணை அதிபருடன் நினைவுகூர்ந்து உரையாடினார்.

அமெரிக்காவை மீண்டும் சிறந்த நாடாக மாற்றவும், வரும் 2047ஆம் ஆண்டில் வளர்ந்த பாரதத்தை உருவாக்கவும் அப்போது இரு நாடுகளின் தலைவர்களும் பகிர்ந்துகொண்ட தகவல்கள் மற்றும் வலுவான பிணைப்பு குறித்து அமெரிக்க துணை அதிபருடன் பிரதமர் விவாதித்தார்.

அதற்கான முன்னேற்றங்கள் குறித்தும் அவர் உரையாடினார்.

இரு நாட்டு மக்களின் நலன்களை கருத்தில்கொண்டு வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் குறித்து அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

எரிசக்தி, பாதுகாப்பு, நவீன தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்புக்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதென்று இரு தலைவர்களும் முடிவு செய்தனர்.

பல்வேறு உலகளாவிய விஷயங்கள் குறித்தும் ராஜ்ய ரீதியிலான விஷயங்கள் குறித்தும் பேச்சு நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அமெரிக்க அதிபர் திரு. ட்ரம்புக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்ட பிரதமர் திரு. மோடி இந்த ஆண்டு இறுதியில் அமெரிக்க அதிபரின் இந்திய பயணத்தை தாம் எதிர்நோக்கி இருப்பதாக தெரிவித்தார்.

இதனிடையே அமெரிக்க துணை அதிபர் திரு. ஜேடி. வான்ஸ் நேற்றிரவு ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூர் வந்தடைந்தார்.

அங்கு அவர் 3 நாட்கள் தங்கியிருப்பார் என எமது செய்தியாளர் தெரிவித்தார்.

<<<<>>>>

அமெரிக்க அரசுடன் இருதரப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்வது குறித்து மத்திய அரசு தீவிரமாக செயல்பட்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக அந்நாட்டுக்கு சென்றுள்ள திருமதி நிர்மலா சீதாராமன் சான்ஃபிரான்சிஸ்கோவில் அந்நாட்டு வர்த்தக பிரதிநிதிகளை சந்தித்து உரையாடினார்.

அமெரிக்காவில் திரு. ட்ரம்ப் தலைமையிலான புதிய அரசுடன் ஆக்கப்பூர்வமான இருதரப்பு உறவுகளை இந்தியா கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடியும், அமெரிக்க அதிபரும் இந்த ஆண்டு தொடக்கத்தில் சம்மதம் தெரிவித்திருந்ததை திருமதி நிர்மலா சீதாராமன் சுட்டிக்காட்டினார்.

வரும் 2030ஆம் ஆண்டுக்குள் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் 500 பில்லியன் டாலர் என்ற அளவை எட்டுவதற்கான இலக்குடன் செயல்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் இந்தியா வேகமான பொருளாதார வளர்ச்சியை அடைந்திருப்பதாகவும், நிலையான அரசு தொடர்வதே அதற்கு காரணம் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

தமது பயணத்தின் தொடர்ச்சியாக அமெரிக்க அமைச்சர் மற்றும் பல்வேறு தலைவர்களையும் அவர் சந்திக்க உள்ளார்.

வாஷிங்டனில் சர்வதேச நிதியமான ஐ.எம்.எஃப் மற்றும் உலக வங்கி கூட்டங்களிலும் திருமதி நிர்மலா சீதாராமன் பங்கேற்கிறார்.

தொடர்ந்து வரும் 26ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை அவர் பெரு நாட்டிற்கு செல்கிறார்.

<<<<>>>>

தேசிய கல்விக் கொள்கையின்படி மூன்றாவது மொழியைப் பயிற்றுவிப்பது கட்டாயமல்ல என்று மத்திய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் தெளிவான வழிகாட்டுதலை வழங்குமா என முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மகாராஷ்டிர மாநிலத்தில் வேறு எந்த மூன்றாவது மொழியும் கட்டாயமல்ல என்று அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிசின் நிலைப்பாட்டை மத்திய அரசு அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்கிறதா என வினவியுள்ளார்.

மும்மொழிக் கொள்கையை ஏற்காத காரணத்தினால் தமிழ்நாட்டுக்கு தராமல் நிறுத்தி வைத்திருக்கும் 2 ஆயிரத்து 152 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு விடுவிக்குமா என்றும் திரு. மு.க. ஸ்டாலின் அதில் கேட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட நீர்வளத்துறை தொடர்பான பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் பெறுவது குறித்து அத்துறைக்கான அமைச்சர் திரு. துரைமுருகன் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

நீர்வளத்துறையின் பணிகளுக்கான நிர்வாக ஒப்புதல் பெற ஏதுவாக மதிப்பீடுகளை நிறைவாக தயாரித்து அனுமதி பெறவும், பணிகளை விரைவில் தொடங்கவும் அதிகாரிகளை அமைச்சர் அறிவுறுத்தினார்.

டெல்டா மாவட்டங்களில் சிறப்பு தூர்வாரும் திட்டத்தின்கீழ் நடைபெறும் பணிகளின் தற்போதைய நிலை குறித்து ஆய்வு செய்து விரைந்து முடிக்கவும் தலைமைப் பொறியாளர்களை அவர் கேட்டுக்கொண்டார்.

மேட்டூர் உட்பட அனைத்து மண்டலங்களிலும் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெறும் பணிகளை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றி கடைமடை வரை தடையின்றி நீர் செல்வதற்கு தலைமைப் பொறியாளர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. துரைமுருகன் வலியுறுத்தினார்.

<<<<>>>>

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்தியாவில் 3 நாள் அரசுமுறை துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

இன்று, நாளை மற்றும் போப் பிரான்சிஸ்-ன் இறுதிச் சடங்கு நடைபெறும் நாளன்று தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஒரே நாடு – ஒரே தேர்தல் தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் முதல் கூட்டம் இன்று நடைபெற உள்ளது.

இன்றைய கூட்டத்தில் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. ஹேமந்த் குப்தாவுடன் குழுவின் உறுப்பினர்கள் கலந்துரையாட உள்ளனர். தொடர்ந்து ஜம்மு-கஷ்மீர் உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு. எஸ்.என். ஷாவுடனும் அவர்கள் உரையாற்றுவார்கள்.

<<<<>>>>

வேளாண்மைக் கல்வியை பாடமாக பயிலும் கல்லூரி மாணவர்கள், சேலத்தில் விவசாயிகளுடன் இணைந்து களப்பயிற்சியில் ஈடுபட்டனர்.

இது இருதரப்பினருக்கும் பயனுள்ளதாக அமைந்தது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்காவில் ஹார்வர்டு பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படும் நிதியை ரத்து செய்யப்போவதாக அறிவித்துள்ள அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் அரசுக்கு எதிராக அந்தப் பல்கலைக்கழகம் வழக்கு தொடர்ந்துள்ளது.

------------

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 20வது தலைமை நீதிபதிகள் மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியாவின் தலைமை நீதிபதி திரு. சஞ்சீவ் கண்ணா, சீனாவின் **Hangzhou** சென்றடைந்தார்.

------------

மகாராஷ்டிர மாநில தலைமை தகவல் ஆணையராக நியமிக்கப்பட்ட திரு. ராகுல் பாண்டே நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார். அவருக்கு ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

------------

சர்வதேச எஃகு கண்காட்சி மற்றும் மாநாடு நாளை மறுநாள் மும்பையில் தொடங்குகிறது. வரும் 26ஆம் தேதி வரை இம்மாநாடு நடைபெறும்.

------------

தமிழக கல்குவாரி மற்றும் கிரஷர் உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக நேற்று அமைச்சர் திரு. துரைமுருகனை சந்தித்து பேசினர்.

------------

தென்காசி மாவட்டத்தில் 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பொதுவினியோகத் திட்டத்திற்காக வாங்கப்பட்ட சரக்கு வாகனங்களை ஆட்சியர் திரு. கமல் கிஷோர் தொடங்கி வைத்தார்.

------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து 500க்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி பெற்றுக்கொண்டார்.

------------

கத்தோலிக்க திருச்சபை தலைமை மதகுருவான போப் பிரான்சிஸ் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மதுரை தூய மரியன்னை பேராலயத்தில் சிறப்பு திருப்பலி மற்றும் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தப்பட்டது.

------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஐபி.எல். கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 39 ரன் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் விளையாடிய குஜராத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 198 ரன் எடுத்தது.

சுப்மன் கில் 90 ரன்னும், சாய் சுதர்ஷன் 52 ரன்னும் சேர்த்தனர்.

199 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய கொல்கத்தா அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுகளை இழந்து 159 ரன் மட்டுமே எடுத்தது.

நேற்றைய ஆட்டத்தில் கொல்கத்தாவை வீழ்த்தியதன் மூலம் குஜராத் அணி 6வது வெற்றியைப் பதிவு செய்து புள்ளிப் பட்டியலில் முதலிடத்தில் தொடர்ந்து நீடிக்கிறது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் லக்னோ அணி – தில்லி அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இரவு மணி 7.30க்கு இப்போட்டி தொடங்கும்.